# பெறுகை அறிவித்தல்

# 01 KW மற்றும் 02 KW நிகர மானியிடல் சூரிய சக்தி அமைப்பு வழங்கல்

## பிரதேச செயலாளர் அலுவலகம், பத்தேகம.

1. பிரதேச பெறுகைக் குழுவின் தலைவராகிய என்னால் பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில் பௌத்த விகாரைகள் 06 சார்பாக இணையமயப்படுத்தப்பட்ட நிகர மானியிடல் சூரிய சக்தி அமைப்பு திட்டமிடப்பட்டு கொண்டு சென்று வழங்கி நிலைப்படுத்தல் செய்து செயற்படுத்தி பராமரிப்புடன் நடாத்திக்கொண்டு செல்வதற்கு தகைமை பெற்ற ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து 2019.07.12 ஆம் திகதி பி.ப. 2.30 வரை முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

2. கேள்வி கோரல் தேசிய கேள்வி கோரல் நடைமுறைகள் அமுல்படுத்தப்படும்.

3. கேள்விதாரர்களினால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் “சூரிய சக்தி செயற்பாடுகள்” க்கான இலங்கை நிலைபெறுதகு சக்தி வள அதிகார சபையில் (SLSEA) செல்லுபடியாகும் பதிவு பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

4. கேள்விதாரர் மீளச் செலுத்தப்படாத ரூபா 2,500/- கேள்வி வைப்புப் பணம் பத்தேகம, பிரதேச செயலாளர் அலுவலகத்தில் சிறாப்பரிடம் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் பிரதேச செயலாளர், பிரதேச செயலாளர் அலுவலகம், பத்தேகம எனும் முகவரிக்கு வியாபாரக் கடிதத் தலைப்பில் எழுதப்பட்ட விண்ணப்பமொன்று சமர்ப்பிப்பதன் மூலம் 2019.06.28ஆம் திகதி தொடக்கம் 2019.07.11 ஆம் திகதி பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் இந்த அலுவலகத்தில் கணக்குப் பிரிவில் இருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

5. வாரத்தில் வேலை செய்யும் நாட்களில் பொதுவான அலுவலக நேரங்களில் வந்து கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்க முடியும் என்பதுடன் மேலதிக விபரங்கள் பத்தேகம, பிரதேச செயலாளர் அலுவலகத்தின் கணக்காளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் 091-4944842, மின்னஞ்சல் முகவரி: baddegamads.acc@gmail.com ஆகும்.

6. பிரதேச செயலாளர், பத்தேகம எனும் பெயரில் கேள்விப் படிவங்களில் தரப்பட்டுள்ளவாறு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 28,000.00 பெறுமதியான செல்லுபடியாகும் கேள்விப் பிணையமொன்று கேள்விப் படிவங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. முத்திரை பொறிக்கப்பட்ட கேள்வி படிவங்கள் 2019.07.12ஆம் திகதி பி.ப. 2.30க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் பிரதேச செயலாளர், பிரதேச செயலாளர் அலுவலகம், பத்தேகம எனும் முகவரிக்கு அனுப்புதல் அல்லது கையில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். கையில் கொண்டு வந்து ஒப்படைப்பதாயின் உரித்துடைய கேள்விப் படிவங்கள் பத்தேகம, பிரதேச செயலாளர் அலுவலகத்தில் கணக்காளர் உத்தியோக அறையில் உள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் கேள்விப் படிவங்கள் இரண்டு பிரதிகளைக் (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) கொண்டதாக அனுப்புதல் வேண்டும். என்பதுடன் அவை இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்” பெறுகை இலக்கம் மற்றும் இணையமயப்படுத்தப்பட்ட நிகர மானியிடல் சூரிய சக்தி அமைப்பு” என குறிப்பிடுதல் வேண்டும். 2019.07.12ஆம் திகதி பி.ப. 2.30க்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததும் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் அந்தச் சந்தர்ப்பத்திற்கு கேள்விதாரர் அல்லது அவர்கள் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அதற்குச் சமுகமளிக்க முடியும். குறைபாடுகளுடைய கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் பிணைப் பணமும் அரசுடைமையாக்கப்படும். பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**பிரதேச பெறுகைக் குழுவின் தலைவர்,**
**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**பத்தேகம.**
2019.06.25